# நலமிகு பதிகங்கள் நாற்பது - திருத்தணி N. சுவாமிநாதன்



**பாடல், பாடல் இடம் பெற்ற கோயில் மற்றும் நாயன்மார் வரலாறு**

**- அபர்ணா. சி**

## 29)  திருமுறை - 1, 128 - திருப்பிரமபுரம், திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஓர்உரு ஆயினை மான்ஆங் காரத்து

ஈர் இயல்பாய் ஒரு விண்முதல் பூதலம்

ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்

படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை

இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை

ஓர்ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும்

முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி

காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை

இருநதி அரவமோடு ஒருமதி சூடினை

ஒருதாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்

நாற்கால் மான் மறி ஐந்தலை அரவம்

ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து

இருகோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை

ஒருதனு இருகால் வளைய வாங்கி

முப்புரத்தோடு நானிலம் அஞ்ச

கொன்று தலத்து உற அவுணரை அறுத்தனை

ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்

முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்

ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு

இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறை முடித்து

நான்மறை ஓதி ஐவகை வேள்வி

அமைத்து ஆறு அங்கம் முதல் எழுத்து ஓதி

வரன்முறை பயின்று எழுவான் தனை வளர்க்கும்

பிரமபுரம் பேணினை

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலி அமைந்து உணர்புகலி அமர்ந்தனை

பொங்கு நாற்கடல் சூழ்வெங்குரு விளங்கினை

பாணி மூஉலகும் புதைய மேல் மிதந்த

தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி

வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுரம் ஒன்று உணர்சிரபுரத்து உறைந்தனை

ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்

விறல்கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை

முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்

பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்

ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை

எச்சன் ஏழ்இசையோன் கொச்சையை மெச்சினை

ஆறுபதமும் ஐந்துஅமர் கல்வியும்

மறைமுதல் நான்கும்

மூன்று காலமும் தோன்ற நின்றனை

இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்

மறுஇலா மறையோர்

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை

கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை ஆதலின் நின்னை

நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

## 30) திருமுறை - 3, 73 - திருப்பட்டீச்சரம், திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

பாடல் மறை சூடல் மதி பல்வளை ஓர்

பாகம் மதில் மூன்று ஓர் கணையால்

கூட எரியூட்டி எழில் காட்டி நிழல்

கூட்டு பொழில் சூழ் பழைசையுள்

மாட மழபாடி உறை பட்டிசரம்

மேய கடி கட்டுஅரவினார்

வேடம் நிலை கொண்டவரை வீடுநெறி

காட்டி வினை வீடும் அவரே. (1)

நீரின் மலி புன்சடையர் நீள்அரவு

கச்சைஅது நச்சு இலையது ஓர்

கூரின் மலி சூலம்அது ஏந்தி உடை

கோவணமும் மானின் உரிதோல்

காரின் மலி கொன்றைவிரிதார் கடவுள்

காதல் செய்து மேய நகர்தான்

பாரின் மலி சீர்பழைசை பட்டிசரம்

ஏத்த வினை பற்றுஅழியுமே. (2)

காலை மடவார்கள் புனல் ஆடுவது

கௌவை கடியார்மறுகு எலாம்

மாலைமணம் நாறு பழையாறை மழபாடி

அழகாயமலிசீர்ப்

பாலையன நீறுபுனை மார்பன்உறை பட்டி

சரமேபரவுவார்
மேலைஒரு மால்கடல்கள் போல்பெருகி விண்உலகம்
ஆளும்அவரே. (3)

கண்ணின்மிசை நண்ணி இழிவிப்ப முகம்
ஏத்து கமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட
ஆடவல பால் மதியினான்
மண்ணின்மிசை நேரின் மழபாடி
மலி பட்டிசரமே மருவுவார்
விண்ணின்மிசை வாழும் இமையோரொடு
உடன் ஆதல்அது மேவல் எளிதே. (4)

மருவு முழவு அதிர மழபாடி மலி
மத்தம்விழவு ஆர்க்கவரை ஆர்
பருவமழை பண் கவர் செய் பட்டிசரம்
மேயபடர் புன்சடையினான்
வெருவ மதயானை உரிபோர்த்து உமையை
அஞ்சவரு வெள் விடையினான்
உருவம் எரிகழல்கள் தொழ உள்ளம்
உடையாரை அடையா வினைகளே. (5)

மறையின் ஒலி கீதம் ஒடு பாடுவன
பூதம்அடி மருவி விரவார்
பறையின் ஒலி பெருக நிகழ் நட்டம்
அமர் பட்டிசரம் மேயபனிகூர்

பிறையின் னொடு மருவியதொர் சடையின் இடை
ஏற்ற புனல் தோற்ற நிலையாம்
இறைவன் அடிமுறை முறையின் ஏத்தும் அவர்
தீத்தொழில்கள் இல்லர்மிகவே. (6)

பிறவி பிணி மூப்பின்னொடு நீங்கி இமையோர்
உலகு பேணல் உறுவார்
துறவி எனும் உள்ளம் உடையார்கள்
கொடி வீதி அழகாய தொகுசீர்
இறைவன் உறை பட்டிசரம் ஏத்தி எழுவார்கள்
வினை ஏதும் இலவாய்
நறவவிரையாலும் மொழியாலும்
வழிபாடு மறவாத அவரே. (7)

நேசம் மிகு தோள் வலவன் ஆகி இறைவன்
மலையை நீக்கியிடலும்
நீசன் விறல் வாட்டி வரையுற்றது
உணராத நிரம்பா மதியினான்
ஈசன் உறை பட்டிசரம் ஏத்தி எழுவார்கள்
வினை ஏதும் இலவாய்
நாசம் அற வேண்டுதலின் நண்ணல் எளிதாம்
அமரர் விண் உலகமே. (8)

தூய மலரானும் நெடியானும் அறியார்
அவன தோற்ற நிலையின்
ஏய வகையானது அதனை யார் அறிவார்

அணிகொள் மார்பின் அகலம்
பாய நல நீறது அணிவான் உமைதனோடு
முறை பட்டிசரமே
மேயவனது ஈரடியும் ஏத்த எளிதாகும்
நலம் மேல் உலகமே. (9)

தடுக்கினை இடுக்கி மடவார்கள் இடு
பிண்டம் அது உண்டு உழல்தரும்
கடுப்பொடி உடல் கவசர் கத்துமொழி
காதல்செய்து இடாது கமழ்சேர்
மடைக்கயல் வயல் கொள் மழபாடி
நகர் நீடு பழையாறை அதனுள்
படைக்கு ஒரு கரத்தன் மிகு பட்டிசரம்
ஏத்தவினை பற்றுஅறுதலே. (10)

மந்த மலி சோலை மழபாடி நகர்
நீடு பழையாறை அதனுள்
பந்தம் உயர் வீடுநல பட்டிசரம்
மேயபடர் புன் சடையனை
அந்தண் மறையோர் இனிது வாழ்புகலி
ஞானசம்பந்தன் அணியார்
செந்தமிழ்கள் கொண்டு இனிது செப்பவல
தொண்டர்வினை நிற்பது இலவே. (11)

திருச்சிற்றம்பலம்

## 31) திருமுறை - 5, 10 - திருமறைக்காடு, திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலம் செய்ம் மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம் ஆகத் திறந்து அருள் செய்ம்மினே. (1)

ஈண்டு செஞ்சடை ஆகத்துள் ஈசரோ
மூண்ட கார் முகிலின் முறிக் கண்டரோ
ஆண்டு கொண்ட நீரே அருள் செய்திடும்
நீண்ட மாக் கதவின் வலி நீக்குமே. (2)

அட்ட மூர்த்தி அது ஆகிய அப்பரோ
துட்டர் வான் புரம் சுட்ட சுவண்டரோ
பட்டம் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட இக் கதவம் திறப்பிம்மினே. (3)

அரிய நால்மறை ஓதிய நாவரோ
பெரிய வான் புரம் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான் கதவம் பிரிவிக்கவே. (4)

மலையில் நீடு இருக்கும் மறைக்காடரோ
கலைகள் வந்து இறைஞ்சும் கழல் ஏத்தரோ
விலை இல் மா மணிவண்ண உருவரோ

தொலைவு இலாக் கதவம் துணை நீக்குமே. (5)

பூக்கும் தாழை புறணி அருகு எலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ் மறைக்காடரோ
ஆர்க்கும் காண்பு அரியீர் அடிகேள் உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. (6)

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்தம் இல்லி அணி மறைக்காடரோ
எந்தை நீ அடியார் வந்து இறைஞ்சிட
இந்த மாக் கதவம் பிணி நீக்குமே. (7)

ஆறு சூடும் அணி மறைக்காடரோ
கூறு மாதுஉமைக்கு ஈந்த குழகரோ
ஏறுஅது ஏறிய எம்பெருமான் இந்த
மாறு இலாக் கதவம் வலி நீக்குமே. (8)

சுண்ண வெண்பொடிப் பூசும் சுவண்டரோ
பண்ணி ஏறு உகந்து ஏறும் பரமரோ
அண்ணல் ஆதி அணி மறைக்காடரோ
திண்ணமாக் கதவம் திறப்பிம்மினே. (9)

விண்உளார் விரும்பி எதிர்கொள்ளவே
மண்உளார் வணங்கும் மறைக்காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம் ஆகத்திறந்து அருள் செய்ம்மினே. (10)

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்று இலீர் எம்பெருமானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ் மறைக்காடரோ
சரக்க இக் கதவம் திறப்பிம்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

## 32) திருமுறை - 7, 77 - திருவையாறு, சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

பரவும் பரிசு ஒன்று அறியேன் நான்

பண்டே உம்மைப் பயிலாதேன்

இரவும் பகலும் நினைந்தாலும்

எய்த நினைய மாட்டேன் நான்

கரவில் அருவி கமுகு உண்ணத்

தெங்கங்குலைக்கீழ்க் கருப்பாலை

அரவம் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (1)

எங்கே போவேன் ஆயிடினும்

அங்கே வந்து என் மனத்தீராய்ச்

சங்கை ஒன்றும் இன்றியே

தலைநாள் கடைநாள் ஒக்கவே

கங்கை சடைமேல் கரந்தானே

கலைமான் மறியுங் கனல்மழுவும்

தங்குந் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (2)

மருவிப் பிரிய மாட்டேன் நான்

வழிநின்று ஒழிந்தேன் ஒழிகிலேன்

பருவி விச்சி மலைச்சாரல்

பட்டை கொண்டு பகடு ஆடிக்

குருவி ஓப்பிக் கிளி கடிவார்

குழல்மேல் மாலை கொண்டு ஓட்டம்
தர அம் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகேளோ ! (3)

பழகா நின்று பணி செய்வார்
பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்
இகழாது உமக்கு ஆட்பட்டோர்க்கு
ஏக படம் ஒன்று அரைச் சாத்திக்
குழகா வாழைக் குலை தெங்கு
கொணர்ந்து கரைமேல் எறியவே
அழகார் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகேளோ ! (4)

பிழைத்த பிழை ஒன்று அறியேன் நான்
பிழையைத் தீரப் பணியாயே
மழைக் கண் நல்லார் குடைந்துஆட
மலையும் நிலனும் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசம் கலந்து எங்கும்
கழனி மண்டிக் கை ஏறி
அழைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து
ஐயாறு உடைய அடிகேளோ ! (5)

கார்க்கொள் கொன்றை சடைமேல் ஒன்று
உடையாய் விடையாய் கையினான்
மூர்க்கர் புரம் மூன்று எரிசெய்தாய்
முன் நீ பின் நீ முதல்வன் நீ

வார்கொள் அருவி பல வாரி

மணியும் முத்தும் பொன்னும் கொண்டு

ஆர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (6)

மலைக்கண் மடவாள் ஒருபாலாய்ப்

பற்றி உலகம் பலி தேர்வாய்

சிலைக்கொள் கணையால் எயில் எய்த

செங்கண் விடையாய் தீர்த்தன் நீ

மலைக்கொள் அருவி பல வாரி

மணியும் முத்தும் பொன்னும் கொண்டு

அலைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (7)

போழும் மதியும் புனக்கொன்றை

புனல் சேர் சென்னிப் புண்ணியா

சூழும் அரவச் சுடர்ச்சோதீ

உன்னைத் தொழுவார் துயர் போக

வாழும் அவர்கள் அங்கங்கே

வைத்த சிந்தை உய்த்து ஆட்டம்

ஆழும் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (8)

கதிர்க்கொள் பசியே ஒத்தே நான்

கண்டேன் உம்மைக் காணாதேன்

எதிர்த்து நீந்த மாட்டேன் நான்

எம்மான் தாம்மான் தம்மானே

விதிர்த்து மேகம் மழை பொழிய

வெள்ளம் பரந்து நுரை சிதறி

அதிர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (9)

கூசி அடியார் இருந்தாலும்

குணம் ஒன்று இல்லீர் குறிப்பு இல்லீர்

தேச வேந்தன் திருமாலும்

மலர்மேல் அயனும் காண்கிலார்

தேசம் எங்கும் தெளிந்து ஆடத்

தெண்நீர் அருவி கொணர்ந்து எங்கும்

வாசந் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (10)

கூடி அடியார் இருந்தாலும்

குணம் ஒன்று இல்லீர் குறிப்பு இல்லீர்

ஊடி இருந்தும் உணர்கிலேன்

உம்மைத் தொண்டன் ஊரனேன்

தேடி எங்கும் காண்கிலேன்

திரு ஆரூரே சிந்திப்பன்

ஆடும் திரைக் காவிரிக் கோட்டத்து

ஐயாறு உடைய அடிகேளோ ! (11)

திருச்சிற்றம்பலம்

## 33) <u>திருமுறை - 7, 1 - திருவெண்ணெய்நல்லூர், சுந்தரர்</u>

திருச்சிற்றம்பலம்

பித்தா பிறைசூடீ பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (1)

நாயேன் பல நாளும் நினைப்பு இன்றி மனத்து உன்னைப்
பேயாய்த் திரிந்து எய்த்தேன் பெறல் ஆகா அருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆயா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (2)

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னைப்
பொன்னே மணிதானே வயிரம்மே பொருது உந்தி
மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அன்னே உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (3)

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றம் ஊர்தீ
கொடியேன் பல பொய்யே உரைப்பேனைக் குறிக்கொள் நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அடிகேள் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (4)

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம் அது பணியாய்
ஆதன் பொருள் ஆனேன் அறிவு இல்லேன் அருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்

ஆதீ உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (5)

தண்ணார் மதிசூடீ தழல் போலும் திருமேனீ
எண்ணார் புரம் மூன்றும் எரியுண்ண நகை செய்தாய்
மண்ணார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள் துறையுள்
அண்ணா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (6)

ஊனாய் உயிர் ஆனாய் உடல் ஆனாய் உலகு ஆனாய்
வானாய் நிலன் ஆனாய் கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆனாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (7)

ஏற்றார் புரம் மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்
தேற்றாதன சொல்லித் திரிவேனோ செக்கர் வான்நீர்
ஏற்றாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆற்றாய் உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (8)

மழுவாள் வலன் ஏந்தீ மறை ஓதி மங்கை பங்கா
தொழுவார் அவர் துயர் ஆயின தீர்த்தல் உன தொழிலே
செழுவார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
அழகா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே. (9)

கார் ஊர் புனல் எய்திக் கரை கல்லித் திரைக்கையால்
பார் ஊர் புகழ் எய்தித் திகழ் பன் மா மணி உந்திச்
சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள் துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆள் அல்லேன் எனல் ஆமே. (10)

திருச்சிற்றம்பலம்

## 34) <u>திருமுறை - 1, 49 - திருநள்ளாறு, திருஞானசம்பந்தர்</u>

திருச்சிற்றம்பலம்

போகம் ஆர்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்அகலம்
பாகம் ஆர்த்த பைங்கண்வெள்ஏற்று அண்ணல் பரமேட்டி
ஆகம் ஆர்த்த தோல்உடையன் கோவண ஆடையின்மேல்
நாகம் ஆர்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (1)

தோடு உடைய காது உடையன் தோல் உடையன் தொலையாப்
பீடு உடைய போர் விடையன் பெண்ணும் ஓர்பால் உடையன்
ஏடு உடைய மேல் உலகோடு ஏழ்கடலும் சூழ்ந்த
நாடு உடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. (2)

ஆன் முறையால் ஆற்ற வெண்நீறு ஆடி அணியிழை ஓர்
பால் முறையால் வைத்த பாதம் பத்தர் பணிந்து ஏத்த
மான்மறியும் வெண்மழுவும் சூலமும் பற்றிய கை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. (3)

புல்க வல்ல வார்சடைமேல் பூம்புனல் பெய்து அயலே
மல்க வல்ல கொன்றைமாலை மதியோடு உடன்சூடிப்
பல்க வல்ல தொண்டர் தம் பொன் பாத நிழல் சேர
நல்க வல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. (4)

ஏறு தாங்கி ஊர்தி பேணி ஏர் கொள் இளமதியம்
ஆறு தாங்கும் சென்னிமேல் ஓர் ஆடு அரவம் சூடி

நீறு தாங்கி நூல் கிடந்த மார்பில் நிரை கொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயது நள்ளாறே. (5)

திங்கள் உச்சி மேல் விளங்கும் தேவன் இமையோர்கள்
எங்கள் உச்சி எம் இறைவன் என்று அடியே இறைஞ்சத்
தங்கள் உச்சியால் வணங்கும் தன் அடியார்கட்கு எல்லாம்
நங்கள் உச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. (6)

வெஞ்சுடர்த்தீ அங்கை ஏந்தி விண்கொள் முழவு அதிர
அஞ்சு இடத்து ஓர் ஆடல் பாடல் பேணுவது அன்றியும்போய்ச்
செஞ்சடைக்கு ஓர் திங்கள் சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சு அடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (7)

சிட்டம் ஆர்ந்த மும்மதிலும் சிலைவரைத் தீஅம்பினால்
சுட்டு மாட்டிச் சுண்ணவெண்நீறு ஆடுவது அன்றியும் போய்ப்
பட்டம் ஆர்ந்த சென்னிமேல் ஓர் பால் மதியம் சூடி
நட்டம் ஆடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. (8)

உண்ணல் ஆகா நஞ்சு கண்டத்து உண்டு உடனே ஒடுக்கி
அண்ணல் ஆகா அண்ணல் நீழல் ஆர் அழல் போல் உருவம்
எண்ணல் ஆகா உள் வினை என்று எள்க வலித்து இருவர்
நண்ணல் ஆகா நம்பெருமான் மேயது நள்ளாறே. (9)

மாசு மெய்யர் மண்டைத் தேரர் குண்டர் குணம் இலிகள்
பேசும் பேச்சை மெய் என்று எண்ணி அந்நெறி செல்லன்மின்
மூசு வண்டு ஆர் கொன்றை சூடி மும்மதிலும் உடனே

நாசம் செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. (10)

தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன் நல்ல
பண்பு நள்ளாறு ஏத்து பாடல் பத்தும் இவை வல்லார்
உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

## 35) <u>திருமுறை - 7, 25 - திருமுதுகுன்றம், சுந்தரர்</u>

திருச்சிற்றம்பலம்

பொன் செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கு அசைத்தீர்
முன் செய்த மூஎயிலும் எரித்தீர் முதுகுன்று அமர்ந்தீர்
மின் செய்த நுண் இடையாள் பரவை இவள் தன் முகப்பே
என் செய்தவாறு அடிகேள் அடியேன் இட்டளம் கெடவே. (1)

உம்பரும் வானவரும் உடனே நிற்கவே எனக்குச்
செம்பொனைத் தந்து அருளித் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
வம்பு அமரும் குழலாள் பரவை இவள் வாடுகின்றாள்
எம்பெருமான் அருளீர் அடியேன் இட்டளம் கெடவே. (2)

பத்தா பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முதுகுன்றம் அமர்ந்தவனே
மைத்து ஆரும் தடங்கண் பரவை இவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே. (3)

மங்கை ஒர்கூறு அமர்ந்தீர் மறை நான்கும் விரித்து உகந்தீர்
திங்கள் சடைக்கு அணிந்தீர் திகழும் முதுகுன்று அமர்ந்தீர்
கொங்கை நல்லாள் பரவை குணம் கொண்டு இருந்தாள் முகப்பே
அங்கணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே. (4)

மை ஆரும் மிடற்றாய் மருவார் புரம் மூன்று எரித்த
செய்யார் மேனியனே திகழும் முதுகுன்று அமர்ந்தாய்
பை ஆரும் அரவு ஏர் அல்குலாள் இவள் வாடுகின்றாள்

ஐயா தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே. (5)

நெடியான் நான்முகனும் இரவியொடும் இந்திரனும்
முடியால் வந்து இறைஞ்ச முதுகுன்றம் அமர்ந்தவனே
படி ஆரும் இயலாள் பரவை இவள் தன் முகப்பே
அடிகேள் தந்தருளீர் அடியேன் இட்டளம் கெடவே. (6)

கொந்து அணவும் பொழில் சூழ் குளிர் மாமதில் மாளிகைமேல்
வந்து அணவும் மதிசேர் சடை மா முதுகுன்று உடையாய்
பந்து அணவும் விரலாள் பரவை இவள் தன்முகப்பே
அந்தணனே அருளாய் அடியேன் இட்டளம் கெடவே. (7)

பரசு ஆரும் கரவா பதினெண்கணமும் சூழ
முரசார் வந்து அதிர முதுகுன்றம் அமர்ந்தவனே
விரை சேரும் குழலாள் பரவை இவள் தன்முகப்பே
அரசே தந்தருளாய் அடியேன் இட்டளம் கெடவே. (8)

ஏத்தாது இருந்து அறியேன் இமையோர் தனி நாயகனே
மூத்தாய் உலகுக்கு எல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்து ஆரும் குழலாள் பரவை இவள் தன்முகப்பே
கூத்தா தந்துஅருளாய் கொடியேன் இட்டளம் கெடவே. (9)

பிறை ஆரும் சடை எம்பெருமான் அருளாய் என்று
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர்தம்மை
மறையார் தம் குரிசில் வயல்நாவல் ஆரூரன் சொன்ன

இறையார் பாடல் வல்லார்க்கு எளிதாம் சிவலோகம் அதே. (10)

திருச்சிற்றம்பலம்

## 36) <u>திருமுறை - 7, 59 - திருவாரூர், சுந்தரர்</u>

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்

போகமும் திருவும் புணர்ப்பானைப்

பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்

பிழை எலாந் தவிரப் பணிப்பானை

இன்ன தன்மையன் என்று அறிவொண்ணா

எம்மானை எளிவந்த பிரானை

அன்னம் வைகும் வயல் பழனத்து அணி

ஆரூரானை மறக்கலுமாமே. (1)

கட்டமும் பிணியும் களைவானைக்

காலற் சீறிய கால் உடையானை

விட்ட வேட்கைவெந்நோய் களைவானை

விரவினால் விடுதற்கு அரியானைப்

பட்ட வார்த்தை பட நின்ற வார்த்தை

வாராமே தவிரப் பணிப்பானை

அட்ட மூர்த்தியை மட்டு அவிழ் சோலை

ஆரூரானை மறக்கலுமாமே. (2)

கார்க்குன்ற மழையாய்ப் பொழிவானைக்

கலைக்கு எலாம் பொருளாய் உடன் கூடிப்

பார்க்கின் ற உயிர்க்குப் பரிந்தானைப்

பகலும் கங்குலுமாகி நின்றானை

ஓர்க்கின்ற செவியைச் சுவை தன்னை

உணரும் நாவினைக் காண்கின்ற கண்ணை
ஆர்க்கின்ற கடலை மலை தன்னை
ஆரூரானை மறக்கலுமாமே. (3)

செத்த போதினில் முன் நின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்
வைத்த சிந்தை உண்டே மனம் உண்டே
மதி உண்டே விதியின் பயன் உண்டே
முத்தன் எங்கள் பிரான் என்று வானோர்
தொழ நின்ற திமில் ஏறு உடையானை
அத்தன் எந்தை பிரான் எம்பிரானை
ஆரூரானை மறக்கலுமாமே. (4)

செறிவு உண்டேல் மனத்தால் தெளிவு உண்டேல்
தேற்றத்தால் வரும் சிக்கனவு உண்டேல்
மறிவு உண்டேல் மறுமைப்பிறப்பு உண்டேல்
வாழ்நாள் மேல் செல்லும் வஞ்சனை உண்டேல்
பொறிவண்டு யாழ்செய்யும் பொன்மலர்க் கொன்றை
பொன் போலுஞ் சடைமேல் புனைந்தானை
அறிவு உண்டே உடலத்து உயிர் உண்டே
ஆரூரானை மறக்கலுமாமே. (5)

பொள்ளல் இவ் உடலைப் பொருள் என்று
பொருளும் சுற்றமும் போகமும் ஆகி
மெள்ள நின்றவர் செய்வன எல்லாம்
வாராமே தவிர்க்கும் விதியானை

வள்ளல் எம்தமக்கே துணை என்று

நாள்நாளும் அமரர் தொழுது ஏத்தும்

அள்ளல் அம்கழனிப் பழனத்து அணி

ஆரூரானை மறக்கலுமாமே. (6)

கரியானை உரி கொண்ட கையானைக்

கண்ணின் மேல் ஒரு கண் உடையானை

வரியானை வருத்தம் களைவானை

மறையானைக் குறைமாமதி சூடற்கு

உரியானை உலகத்து உயிர்க்கு எல்லாம்

ஒளியானை உகந்து உள்கி நண்ணாதார்க்கு

அரியானை அடியேற்கு எளியானை

ஆரூரானை மறக்கலுமாமே. (7)

வாளா நின்று தொழும் அடியார்கள்

வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்

நாள் நாளும் மலர் இட்டு வணங்கார்

நம்மை ஆள்கின்ற தன்மையை ஓரார்

கேளா நான் கிடந்தே உழைக்கின்றேன்

கிளைக்கு எலாம் துணையாம் எனக் கருதி

ஆளாவான் பலர் முன்பு அழைக்கின்றேன்

ஆரூரானை மறக்கலுமாமே. (8)

விடக்கையே பெருக்கிப் பல நாளும்

வேட்கையால் பட்ட வேதனை தன்னைக்

கடக்கிலேன் நெறி காணவும் மாட்டேன்

கண் குழிந்து இரப்பார் கையில் ஒன்றும்
இடக்கிலேன் பரவைத் திரைக் கங்கைச்
சடையானை உமையாளை ஓர் பாகத்து
அடக்கினானை அந் தாமரைப் பொய்கை
ஆரூரானை மறக்கலுமாமே. (9)

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப் போதனை நச்சு அரவு ஆர்த்த
பட்டியைப் பகலை இருள் தன்னைப்
பாவிப்பார் மனத்து ஊறும் அத்தேனைக்
கட்டியைக் கரும்பின் தெளிதன்னைக்
காதலால் கடல் சூர் தடிந்திட்ட
செட்டி அப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூரானை மறக்கலுமாமே. (10)

ஓர் ஊர் என்று உலகங்களுக்கு எல்லாம்
உரைக்கலாம் பொருளாய் உடன் கூடிக்
கார் ஊரும் கமழ் கொன்றைநன் மாலை
முடியன் காரிகை காரணமாக
ஆரூரைம்மறத்தற்கு அரியானை
அம்மான் தன் திருப்பேர் கொண்ட தொண்டன்
ஆரூரன் அடி நாய் உரை வல்லார்
அமரலோகத்து இருப்பவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

## 37) திருமுறை - 1, 54 - திருவோத்தூர், திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

பூத் தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன் அடி
ஏத்தாதார் இல்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளி மழுவாள் அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே. (1)

இடை ஈர் போகா இளமுலையாளை ஓர்
புடையீரே புள்ளி மான் உரி
உடையீரே உம்மை ஏத்துதும் ஓத்தூர்ச்
சடையீரே உம தாளே. (2)

உள்வேர் போல நொடிமையினார் திறம்
கொள்வீர் அல்குல் ஓர் கோவணம்
ஒள் வாழைக்கனி தேன் சொரி ஓத்தூர்க்
கள்வீ ரே உம காதலே. (3)

தோட்டீரே துத்தி ஐந்தலை நாகத்தை
ஆட்டீரே அடியார் வினை
ஓட்டீரே உம்மை ஏத்துதும் ஓத்தூர்
நாட்டீரே அருள் நல்குமே. (4)

குழை ஆர் காதீர் கொடுமழுவாள் படை
உழை ஆள்வீர் திரு ஓத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடி நின்று ஆடுவார்

அழையாமே அருள் நல்குமே. (5)

மிக்கார் வந்து விரும்பிப் பலி இடத்
தக்கார் தம் மக்களீர் என்று
உட்காதார் உளரோ திருஓத்தூர்
நக்கீரே அருள் நல்குமே. (6)

தாது ஆர் கொன்றை தயங்கும் முடிஉடை
நாதா என்று நலம் புகழ்ந்து
ஓதாதார் உளரோ திரு ஓத்தூர்
ஆதீரே அருள் நல்குமே. (7)

என் தான் இம்மலை என்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதில் எய்தவன் ஓத்தூர்
என்றார் மேல் வினை ஏகுமே. (8)

நன்றா நால்மறையானொடு மாலும்ஆய்ச்
சென்றார் போலும் திசைஎலாம்
ஒன்றாய் உள் எரிஆய் மிக ஓத்தூர்
நின்றீரே உமை நேடியே. (9)

கார் அமண் கலிங்கத்துவர் ஆடையர்
தேரர் சொல்அவை தேறன்மின்
ஓர் அம்பால் எயில் எய்தவன் ஓத்தூர்ச்

சீரவன் கழல் சேர்மினே. (10)

குரும்பை ஆண்பனை ஈன் குலை ஓத்தூர்

அரும்பு கொன்றை அடிகளைப்

பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்

விரும்புவார் வினை வீடே. (11)

திருச்சிற்றம்பலம்

## 38) <u>திருமுறை - 2, 18 - திருமருகல், திருஞானசம்பந்தர்</u>

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடை ஆர் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உள் மெலிவே. (1)

சிந்தாய் எனுமால் சிவனே எனுமால்
முந்தாய் எனுமால் முதல்வா எனுமால்
கொந்து ஆர் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. (2)

அறையார் கழலும் அழல்வாய் அரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாய் இவளை
இறையார் வளைகொண்டு எழில் வவ்வினையே. (3)

ஒலிநீர் சடையில் கரந்தாய் உலகம்
பலி நீ திரிவாய் பழியில் புகழாய்
மலி நீர் மருகல் மகிழ்வாய் இவளை
மெலி நீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. (4)

துணி நீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணி நீல கண்டம் உடையாய் மருகல்
கணி நீல வண்டு ஆர் குழலாள் இவள்தன்

அணி நீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே. (5)

பலரும் பரவப் படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்று உடையாய் மருகல்
புலருந் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. (6)

வழுவாள் பெருமான் கழல் வாழ்க எனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. (7)

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்கல் விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலம் கொள் மதில் சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. (8)

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாதது ஒர் தீத்திரள் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வு ஆக்கினையே. (9)

அறிவு இல் சமணும் அலர்சாக்கியரும்
நெறி அல்லன செய்தனர் நீன்று உழல்வார்
மறி ஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறி ஆர் குழலி நிறை நீக்கினையே. (10)

வயஞானம் வல்லார் மருகல் பெருமான்

உயர் ஞானம் உணர்ந்து அடி உள்குதலால்

இயல் ஞானசம்பந்தன பாடல் வல்லார்

வியன் ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. (11)

திருச்சிற்றம்பலம்

## 39) <u>திருமுறை - 2, 37 - திருமறைக்காடு, திருஞானசம்பந்தர்</u>

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட்டு உறை மைந்தா
இது நன்கு இறை வைத்து அருள்செய்க எனக்குஉன்
கதவம் திருக்காப்புக் கொள்ளும் கருத்தாலே. (1)

சங்கம் தரளம் அவை தான் கரைக்கு எற்றும்
வங்கக் கடல் சூழ் மறைக்காட்து உறை மைந்தா
மங்கை உமை பாகமும் ஆக இது என்கொல்
கங்கை சடைமேல் அடைவித்த கருத்தே. (2)

குரவம் குருக்கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில் சூழ் மறைக்காட் டு உறை மைந்தா
சிரமும் மலரும் திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம் மதியோடு அடைவித்தல் அழகே. (3)

படர் செம்பவளத்தொடு பன்மலர் முத்தம்
மடல அம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை மைந்தா
உடலம் உமை பங்கம் அது ஆகியும் என்கொல்
கடல் நஞ்சு அமுதா அது உண்ட கருத்தே. (4)

வானோர் மறை மா தவத்தோர் வழிபட்ட
தேனார் பொழில் சூழ் மறைக்காட்டு உறை செல்வா
ஏனோர் தொழுது ஏத்த இருந்த நீ என்கொல்
கானார் கடு வேடுவன் ஆன கருத்தே. (5)

பல காலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி

மலரால் வழிபாடு செய் மா மறைக்காடா
உலகு ஏழ் உடையாய் கடைதோறும் முன் என்கொல்
தலை சேர் பலி கொண்டு அதில் உண்டதுதானே. (6)

வேலா வலயத்து அயலே மிளிர்வு எய்தும்
சேலார் திரு மா மறைக்காட்டு உறை செல்வா
மாலோடு அயன் இந்திரன் அஞ்ச முன் என்கொல்
காலார் சிலைக் காமனை காய்ந்த கருத்தே. (7)

கலம் கொள் கடல் ஓதம் உலாவும் கரைமேல்
வலம் கொள்பவர் வாழ்த்து இசைக்கும் மறைக்காடா
இலங்கை உடையான் அடர்ப்பட்டு இடர் எய்த
அலங்கல் விரல் ஊன்றி அருள் செய்தஆறே. (8)

கோன் என்று பல்கோடி உருத்திரர் போற்றும்
தேன் அம் பொழில் சூழ் மறைக்காட்டு உறை செல்வா
ஏனம் கழுகு ஆனவர் உன்னை முன் என்கொல்
வானம் தலம் மண்டியும் கண்டிலா ஆறே. (9)

வேதம் பல ஓமம் வியந்து அடி போற்ற
ஓதம் உலவும் மறைக்காட்டில் உறைவாய்
ஏதில் சமண்சாக்கியர் வாக்கு இவை என்கொல்
ஆதரொடு தாம் அலர் தூற்றியவாறே. (10)

காழிந்நகரான் கலை ஞானசம்பந்தன்
வாழிம் மறைக்காடனை வாய்ந்து அறிவித்த
ஏழின் இசைமாலை ஈர் ஐந்து இவை வல்லார்
வாழி உலகோர் தொழ வான் அடைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

## 40) <u>திருமுறை - 4, 2 - திருவதிகை வீரட்டானம், திருநாவுக்கரசர்</u>

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த் திங்கள் சூளாமணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (1)

பூண்டது ஓர் கேழல் எயிறும் பொன் திகழ் ஆமை புரள
நீண்ட திண் தோள் வலம் சூழ்ந்து நிலாக்கதிர் போல வெண் நூலும்
காண் தகு புள்ளின் சிறகும் கலந்த கட்டங்கக் கொடியும்
ஈண்டு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (2)

ஒத்த வடத்து இள நாகம் உருத்திர பட்டம் இரண்டும்
முத்துவடக் கண்டிகையும் முளைத்து எழு மூ இலை வேலும்
சித்தவடமும் அதிகைச் சேண் உயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (3)

மடமான் மறி பொன்கலையும் மழுப் பாம்பு ஒரு கையில் வீணை
குடமால் வரைய திண்தோளும் குனிசிலைக் கூத்தின் பயில்வும்
இடம் மால் தழுவிய பாகம் இரு நிலன் ஏற்ற சுவடும்
தடம் ஆர் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (4)

பலபல காமத்தர் ஆகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே

கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்

வலம் ஏந்து இரண்டு சுடரும் வான் கயிலாய மலையும்

நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (5)

கரந்தன கொள்ளி விளக்கும் கறங்கு துடியின் முழக்கும்

பரந்த பதினெண் கணமும் பயின்று அறியாதன பாட்டும்

அரங்கு இடை நூல் அறிவாளர் அறியப் படாதது ஒர் கூத்தும்

நிரந்த கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (6)

கொலை வரி வேங்கை அதளும் குவவோடு இலங்கு பொற் தோடும்

விலை பெறு சங்கக் குழையும் விலை இல் கபாலக் கலனும்

மலைமகள் கைக்கொண்ட மார்பும் மணி ஆர்ந்து இலங்கு மிடறும்

உலவு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (7)

ஆடல் புரிந்த நிலையும் அரையில் அசைத்த அரவும்

பாடல் பயின்ற பல்பூதம் பல் ஆயிரம் கொள் கருவி

நாடற்கு அரியது ஒர் கூத்தும் நன்கு உயர் வீரட்டம் சூழ்ந்து

ஓடும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்

அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (8)

சூழும் அரவத்துகிலும் துகில் கிழி கோவணக்கீளும்

யாழின் மொழியவள் அஞ்ச அஞ்சாது அருவரை போன்ற
வேழம் உரித்த நிலையும் விரிபொழில் வீரட்டம் சூழ்ந்து
தாழும் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (9)

நரம்பு எழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்கள் எல்லாம் கொண்டு எடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்து அருள் செய்வான் வளர் பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை. (10)

திருச்சிற்றம்பலம்

## 41) திருமுறை - 4, 9 - பொது – திருஅங்கமாலை (திருப்பூந்துருத்தி), திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய். (1)

கண்காள் காண்மின்களோ - கடல்
நஞ்சு உண்ட கண்டன் தன்னை
எண் தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ. (2)

செவிகாள் கேண்மின்களோ - சிவன்
எம் இறை செம்பவள
எரி போல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. (3)

மூக்கே நீ முரலாய் - முது
காடு உறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய். (4)

வாயே வாழ்த்துகண்டாய் - மத
யானை உரி போர்த்துப்

பேய் வாழ் காட்டு அகத்து ஆடும் பிரான் தன்னை
வாயே வாழ்த்து கண்டாய். (5)

நெஞ்சே நீ நினையாய் - நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய். (6)

கைகாள் கூப்பித் தொழீர் - கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பு அரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர். (7)

ஆக்கையால் பயன் என் - அரன்
கோயில் வலம் வந்து
பூக் கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
ஆக்கையால் பயன் என். (8)

கால்களால் பயன் என் - கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்களால் பயன் என். (9)

உற்றார் ஆர் உளரோ - உயிர்
கொண்டு போம்பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு

உற்றார் ஆர் உளரோ. (10)

இறுமாந்து இருப்பன்கொலோ - ஈசன்
பல்கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச் சென்று அங்கு
இறுமாந்து இருப்பன்கொலோ. (11)

தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என் உளே
தேடிக் கண்டு கொண்டேன். (12)

திருச்சிற்றம்பலம்

## 42) திருமுறை - 7, 34 - திருப்புகலூர், சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும்

சார்கினும் தொண்டர் தருகிலாப்

பொய்ம்மையாளரைப் பாடாதி எந்தை

புகலூர் பாடுமின் புலவீர்காள்

இம்மையே தரும் சோறும் கூறையும்

ஏத்தலாம் இடர் கெடலுமாம்

அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே. (1)

மிடுக்கு இலாதானை வீமனே விறல்

விசயனே வில்லுக்கு இவன் என்று

கொடுக்கிலாதானைப் பாரியே என்று

கூறினும் கொடுப்பார் இலை

பொடிக்கொள் மேனி எம் புண்ணியன்

புகலூரைப் பாடுமின் புலவீர்காள்

அடுக்கு மேல் அமருலகம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே. (2)

காணியேல் பெரிது உடையனே கற்று

நல்லனே சுற்றம் நல் கிளை

பேணியே விருந்து ஓம்புமே என்று

பேசினும் கொடுப்பார் இலை

பூணி பூண்டு உழப் புள் சிலம்பும் தண்

புகலூர் பாடுமின் புலவீர்காள்
ஆணியாய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. (3)

நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்து உடல்
நடுங்கி நிற்கும் இக் கிழவனை
வரைகள் போல் திரள் தோளனே என்று
வாழ்த்தினும் கொடுப்பார் இலை
புரை வெள் ஏறு உடைப் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அரையனார் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. (4)

வஞ்ச நெஞ்சனை மா சழக்கனைப்
பாவியை வழக்கு இல்லியைப்
பஞ்ச துட்டனைச் சாதுவே என்று
பாடினும் கொடுப்பார் இலை
பொன் செய் செஞ்சடைப் புண்ணியன்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில் நோய் அறுத்து உஞ்சு போவதற்கு
யாதும் ஐயறவு இல்லையே. (5)

நலம் இலாதானை நல்லனே என்று
நரைத்த மாந்தனை இளையனே
குலம் இலாதானைக் குலவனே என்று
கூறினும் கொடுப்பார் இலை

புலம் எலாம் வெறி கமழும் பூம்

புகலூரைப் பாடுமின் புலவீர்காள்

அலமராது அமருலகம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே. (6)

நோயனைத் தடந்தோளனே என்று

நொய்ய மாந்தனை விழுமிய

தாய் அன்றோ புலவோர்க்கு எலாம் என்று

சாற்றினும் கொடுப்பார் இலை

போய் உழன்று கண் குழியாதே எந்தை

புகலூர் பாடுமின் புலவீர்காள்

ஆயம் இன்றிப் போய் அண்டம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே. (7)

எள் விழுந்த இடம் பார்க்கும் ஆகிலும்

ஈக்கும் ஈகிலன் ஆகிலும்

வள்ளலே எங்கள் மைந்தனே என்று

வாழ்த்தினும் கொடுப்பார் இலை

புள்எலாம் சென்று சேரும் பூம்

புகலூரைப் பாடுமின் புலவீர்காள்

அள்ளல் பட்டு அழுந்தாது போவதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே. (8)

கற்றிலாதானைக் கற்று நல்லனே

காமதேவனை ஒக்குமே

முற்றிலாதானை முற்றனே என்று

மொழியினும் கொடுப்பார் இலை
பொத்தில் ஆந்தைகள் பாட்டு ஆறாப்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. (9)

தையலாருக்கு ஒர் காமனே சால
நல அழகு உடை ஐயனே
கை உலாவிய வேலனே என்று
கழறினும் கொடுப்பார் இலை
பொய்கை வாவியின் மேதி பாய்
புகலூரைப் பாடுமின் புலவீர்காள்
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. (10)

செறுவினில் செழுங் கமலம் ஓங்கு தென்
புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன்
வனப்பகை அப்பன் சடையன் தன்
சிறுவன் வன் தொண்டன் ஊரன் பாடிய
பாடல் பத்து இவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே. (11)

திருச்சிற்றம்பலம்

## 43) திருமுறை - 7, 100 - திருநொடித்தான் மலை, சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

தான் எனை முன் படைத்தான் அது
அறிந்து தன் பொன் அடிக்கே
நான் என பாடல் அந்தோ
நாயினேனைப் பொருட்படுத்து
வான் எனை வந்து எதிர்கொள்ள
மத்தயானை அருள்புரிந்து
ஊன் உயிர் வேறு செய்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (1)

ஆனை உரித்த பகை
அடியேனொடு மீளக்கொலோ
ஊனை உயிர் வெருட்டி ஒள்ளி
யானை நினைந்திருந்தேன்
வானை மதித்தமரர் வலம்
செய்து எனை ஏற வைக்க
ஆனை அருள்புரிந்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (2)

மந்திரம் ஒன்று அறியேன் மனை
வாழ்க்கை மகிழ்ந்து அடியேன்
சுந்தர வேடங்களால் துரிசே
செயும் தொண்டன் எனை
அந்தர மால் விசும்பில் அழகு

ஆனை அருள் புரிந்த
துந்தரமோ நெஞ்சமே
நொடித்தான்மலை உத்தமனே. (3)

வாழ்வை உகந்த நெஞ்சே
மடவார் தங்கள் வல்வினைப் பட்டு
ஆழ முகந்த என்னை அது
மாற்றி அமரர் எல்லாம்
சூழ அருள் புரிந்து தொண்டனேன்
பரம் அல்லது ஒரு
வேழம் அருள்புரிந்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (4)

மண்ணுலகில் பிறந்து நும்மை
வாழ்த்தும் வழி அடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன்
இன்று கண்டொழிந்தேன்
விண்ணுலகத்தவர்கள் விரும்ப
வெள்ளை யானையின் மேல்
என் உடல் காட்டுவித்தான்
நொடித்தான்மலை உத்தமனே. (5)

அஞ்சினை ஒன்றி நின்று அலர்
கொண்டு அடி சேர்வறியா
வஞ்சனை என் மனமே வைகி
வானநன் நாடர்முன்னே

துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன்

பரம் அல்லது ஒரு

வெஞ்சின ஆனை தந்தான்

நொடித்தான்மலை உத்தமனே. (6)

நிலை கெட விண் அதிர நிலம்

எங்கும் அதிர்ந்து அசைய

மலை இடை யானை ஏறி வழியே

வருவேன் எதிரே

அலை கடலால் அரையன் அலர்

கொண்டு முன் வந்து இறைஞ்ச

உலை அணையாத வண்ணம்

நொடித்தான்மலை உத்தமனே. (7)

அர ஒலி ஆகமங்கள் அறிவார்

அறி தோத்திரங்கள்

விரவிய வேத ஒலி விண்எலாம்

வந்து எதிர்ந்து இசைப்ப

வரம் மலி வாணன் வந்து வழி

தந்து எனக்கு ஏறுவது ஓர்

சிரம் மலி யானை தந்தான்

நொடித்தான்மலை உத்தமனே. (8)

இந்திரன் மால் பிரமன் எழிலார்

மிகு தேவர் எல்லாம்

வந்தெதிர் கொள்ள என்னை மத்த

யானை அருள் புரிந்து
மந்திர மா முனிவர் இவன்
ஆர் என எம்பெருமான்
நந்தமர் ஊரன் என்றான்
நொடித்தான்மலை உத்தமனே. (9)

ஊழி தொறு ஊழி முற்றும் உயர்
பொன் நொடித்தான்மலையைச்
சூழ் இசை இன்கரும்பின் சுவை
நாவல ஊரன் சொன்ன
ஏழ் இசை இன் தமிழால் இசைந்து
ஏத்திய பத்தினையும்
ஆழி கடல் அரையா
அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே. (10)

திருச்சிற்றம்பலம்

## 44) திருமுறை - 7, 39 - பொது (திருவாரூர்), சுந்தரர்

திருச்சிற்றம்பலம்

தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திரு நீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான் தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரி பொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லி மென் முல்லைஅந்தார் அமர் நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (1)

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்
ஏனாதிநாதன் தன் அடியார்க்கும் அடியேன்
கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பற்கு அடியேன்
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்
மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்
எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்
அலை மலிந்த புனல் மங்கை ஆனாயற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (2)

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவாற்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க

வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (3)

திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன் தன் அடியார்க்கும் அடியேன்
பெரு நம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பற்கும் பேயார்க்கும் அடியேன்
ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலி புனல் சூழ் சாத்தமங்கை நீலநக்கற்கு அடியேன்
அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (4)

வம்பு அறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடிஅலால் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டம் மிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (5)

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்
சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங்குடி மேய சிறுத்தொண்டற்கு அடியேன்

கார் கொண்ட கொடைக் கழறிற்றறிவாற்கும் அடியேன்
கடல் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர் கொண்ட வேல் கூற்றன் களந்தைக் கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (6)

பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கு அடியேன்
மெய்அடியான் நரசிங்க முனையரையற்கு அடியேன்
விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தற்கு அடியேன்
கை தடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (7)

கறைக்கண்டன் கழல் அடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக் கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக் கொண்ட வேல் நம்பி முனையடுவாற்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (8)

கடல் சூழ்ந்த உலகு எலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல் சூழ்ந்த தார் நம்பி இடங்கழிக்கும் தஞ்சை

மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடை சூழ்ந்த புலி அதள்மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (9)

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திரு ஆரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச் சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. (10)

மன்னிய சீர் மறை நாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணாற்கு அடியேன்
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்
என்னவனாம் அரன் அடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டி உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

## 45) திருமுறை - 1, 1 - திருப்பிரமபுரம், திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

தோடு உடைய செவியன் விடைஏறி ஓர் தூ வெண்மதி சூடிக்
காடு உடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்
ஏடு உடைய மலரால் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (1)

முற்றல் ஆமை இள நாகமொடு ஏன முளைக்கொம்பு அவை பூண்டு
வற்றல் ஓடு கலனாப் பலி தேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுது ஏத்தப்
பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (2)

நீர் பரந்த நிமிர் புன்சடைமேல் ஓர் நிலா வெண்மதி சூடி
ஏர் பரந்த இனவெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
ஊர் பரந்த உலகின் முதல் ஆகிய ஓர் ஊர் இது என்னப்
பேர் பரந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (3)

விண் மகிழ்ந்த மதில் எய்ததும் அன்றி விளங்கு தலை ஓட்டில்
உள் மகிழ்ந்து பலி தேரிய வந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மண் மகிழ்ந்த அரவம் மலர்க்கொன்றை மலிந்த வரை மார்பில்
பெண் மகிழ்ந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (4)

ஒருமை பெண்மை உடையன் சடையன் விடை ஊரும் இவன் என்ன
அருமை ஆக உரை செய்ய அமர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்தது ஓர் காலம் இது என்னப்

பெருமை பெற்ற பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (5)

மறை கலந்த ஒலி பாடலோடு ஆடலர் ஆகி மழு ஏந்தி
இறை கலந்த இன வெள்வளை சோர என் உள்ளம் கவர் கள்வன்
கறை கலந்த கடி ஆர் பொழில் நீடு உயர் சோலைக் கதிர் சிந்தப்
பிறை கலந்த பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (6)

சடை முயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வு எய்த
உடை முயங்கும் அரவோடு உழிதந்து எனது உள்ளம் கவர் கள்வன்
கடல் முயங்கு கழி சூழ் குளிர்கானல் அம் பொன் அம் சிறகு அன்னம்
பெடை முயங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (7)

வியர் இலங்கு வரை உந்திய தோள்களை வீரம் விளைவித்த
உயர் இலங்கை அரையன் வலி செற்று எனது உள்ளம் கவர் கள்வன்
துயர் இலங்கும் உலகில் பலஊழிகள் தோன்றும் பொழுது எல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (8)

தாள் நுதல் செய்து இறை காணிய மாலொடு தண் தாமரையானும்
நீணுதல் செய்து ஒழிய நிமிர்ந்தான் எனது உள்ளம் கவர் கள்வன்
வாள் நுதல் செய் மகளீர் முதலாகிய வையத்தவர் ஏத்தப்
பேணுதல் செய் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (9)

புத்தரோடு பொறி இல் சமணும் புறம் கூற நெறி நில்லா
ஒத்த சொல்ல உலகம் பலி தேர்ந்து எனது உள்ளம் கவர் கள்வன்
மத்தயானை மறுக உரி போர்த்தது ஓர் மாயம் இது என்னப்
பித்தர் போலும் பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே. (10)

அருநெறிய மறை வல்ல முனி அகன் பொய்கை அலர் மேய
பெரு நெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் தன்னை
ஒரு நெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன் உரை செய்த
திரு நெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே. (11)

திருச்சிற்றம்பலம்

## 46) திருமுறை - 1, 44 - திருப்பாச்சிலாச்சிராமம், திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

துணி வளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணி வளர் கொள்கையர் பாரிடம் சூழ ஆர் இடமும் பலி தேர்வர்
அணி வளர் கோலம் எலாம் செய்து பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
மணி வளர் கண்டரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே. (1)

கலை புனை மான் உரி தோல் உடை ஆடை கனல் சுடரால் இவர் கண்கள்
தலை அணி சென்னியர் தார் அணி மார்பர் தம் அடிகள் இவர் என்ன
அலை புனல் பூம்பொழில் சூழ்ந்து அமர் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
இலை புனை வேலரோ ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே. (2)

வெஞ்சுடர் ஆடுவர் துஞ்சு இருள் மாலை வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
நஞ்சு அடை கண்டர் நெஞ்சு இடம் ஆக நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சு அடை மாளிகை சூழ்தரு பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச் சிதை செய்வதோ இவர் சீரே. (3)

கன மலர்க்கொன்றை அலங்கல் இலங்கக் கனல் தரு தூ மதிக்கண்ணி
புன மலர்மாலை அணிந்து அழகாய புனிதர் கொல் ஆம் இவர் என்ன
அனம் மலி வண்பொழில் சூழ்தரு பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
மனம் மலி மைந்தரோ மங்கையை வாட மயல் செய்வதோ இவர் மாண்பே. (4)

மாந்தர்தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி வளர்சடை மேல் புனல் வைத்து
மோந்தை முழாக் குழல் தாளம் ஒர் வீணை முதிர ஓர் வாய்மூரி பாடி
ஆந்தைவிழிச் சிறு பூதத்தர் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற

சாந்து அணி மார்பரோ தையலை வாடச் சதுர் செய்வதோ இவர் சார்வே. (5)

நீறுமெய் பூசி நிறைசடை தாழ நெற்றிக்கண்ணால் உற்று நோக்கி
ஆறு அது சூடி ஆடரவு ஆட்டி ஐவிரல் கோவண ஆடை
பால் தரு மேனியர் பூதத்தர் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
ஏறு அது ஏறியர் ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே. (6)

பொங்கு இள நாகம் ஓர் ஏகவடத்தோடு ஆமை வெண்ணூல் புனை கொன்றை
கொங்கு இள மாலை புனைந்து அழகாய குழகர்கொல் ஆம் இவர் என்ன
அங்கு இள மங்கை ஓர் பங்கினர் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச் சதிர் செய்வதோ இவர் சார்வே. (7)

ஏவலத்தால் விசயற்கு அருள் செய்து இராவணனை ஈடு அழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தியை அன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் எழில் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழை வாடச் சிதை செய்வதோ இவர் சேர்வே. (8)

மேலது நான்முகன் எய்தியது இல்லை கீழ் அது சேவடி தன்னை
நீல் அது வண்ணனும் எய்தியது இல்லை என இவர் நின்றதும் அல்லால்
ஆல் அது மா மதி தோய்பொழில் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
பால் அது வண்ணரோ பைந்தொடி வாடப் பழி செய்வதோ இவர் பண்பே. (9)

நாணொடு கூடிய சாயினரேனும் நகுவர் அவர் இருபோதும்
ஊணொடு கூடிய உட்கும் தகையால் உரைகள் அவை கொள வேண்டா
ஆணொடு பெண்வடிவு ஆயினர் பாச்சில் ஆச்சிராமத்து உறைகின்ற
பூண்நெடு மார்பரோ பூங்கொடி வாடப் புனை செய்வதோ இவர் பொற்பே. (10)

அகம் மலி அன்பொடு தொண்டர் வணங்க ஆச்சிராமத்து உறைகின்ற
புகை மலி மாலை புனைந்து அழகாய புனிதர் கொலாம் இவர் என்ன
நகை மலி தண்பொழில் சூழ்தரு காழி நல்தமிழ் ஞானசம்பந்தன்
தகை மலி தண்தமிழ் கொண்டு இவை ஏத்தச் சாரகிலா வினைதானே. (11)

திருச்சிற்றம்பலம்

## 47) <u>திருமுறை - 3, 22 - பொது (சீர்காழி - பஞ்சாக்கரத் திருப்பதிகம்),</u>

## <u>திருஞானசம்பந்தர்</u>

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சு அகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே. (1)

மந்திரம் நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்று அவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்சு எழுத்துமே. (2)

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன் புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்சு எழுத்துமே. (3)

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன் தமர் கொண்டு போம் இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்சு எழுத்துமே. (4)

கொங்கு அலர் வன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்கு உள பூதமும் அஞ்ச ஐம் பொழில்

தங்கு அரவின் படம் அஞ்சு தம் உடை
அம் கையில் ஐவிரல் அஞ்சு எழுத்துமே. (5)

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்சு எழுத்துமே. (6)

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்சு எழுத்துமே. (7)

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்சு எழுத்துமே. (8)

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர் வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர் வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்டு
ஆர்வணம் ஆவன அஞ்சு எழுத்துமே. (9)

புத்தர் சமண் கழுக்கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப் பகைக்கு

அத்திரம் ஆவன அஞ்சு எழுத்துமே. (10)

நற்றமிழ் ஞானசம்பந்தன் நால்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றம்இல் மாலை ஈர்ஐந்தும் அஞ்சு எழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. (11)

திருச்சிற்றம்பலம்

## 48) திருமுறை - 1, 92 - திருவீழிமிழலை, திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசு இல் மிழலையீர் ஏசல் இல்லையே. (1)

இறைவர் ஆயினீர் மறை கொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே. (2)

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே. (3)

நீறு பூசினீர் ஏற அது ஏறினீர்
கூறு மிழலையீர் பேறும் அருளுமே. (4)

காமன் வேவ ஓர் தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர் சேமம் நல்குமே. (5)

பிணிகொள் சடையினீர் மணிகொண் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டு அருளுமே. (6)

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே. (7)

அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர் கரக்கை தவிர்மினே. (8)

அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர் பயனும் அருளுமே. (9)

பறிகொள் தலையினார் அறிவது அறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவுஅது அரியதே. (10)

காழி மா நகர் வாழி சம்பந்தன்
வீழிமிழலை மேல் தாழும் மொழிகளே. (11)

திருச்சிற்றம்பலம்

## 49) <u>திருமுறை - 8, 13 - திருவாசகம் - திருப்பூவல்லி, மாணிக்கவாசகர்</u>

## <u>திருமுறை - 9, 23 - திருவாலியமுதனார் - கோயில், திருவாலியமுதனார்</u>

## <u>திருமுறை - 9, 29 - சேந்தனார் - கோயில், சேந்தனார்</u>

## <u>திருமுறை - 12, 14 - ஆனாய நாயனார் புராணம், சேக்கிழார்</u>

### 8-13. திருவாசகம் - திருப்பூவல்லி

திருச்சிற்றம்பலம்

வணங்கத் தலை வைத்து

வார் கழல் வாய் வாழ்த்த வைத்து

இணங்கத் தன் சீர் அடியார்

கூட்டமும் வைத்து எம்பெருமான்

அணங்கொடு அணிதில்லை

அம்பலத்தே ஆடுகின்ற

குணம் கூரப் பாடி நாம்

பூவல்லி கொய்யாமோ. (8-13-7)

திருச்சிற்றம்பலம்

### 9-23. திருவாலியமுதனார் - கோயில் (பாவளமால்மரை)

திருச்சிற்றம்பலம்

வைத்த பாதங்கள் மால்அவன் காண்கிலன்

மலர்அவன் முடிதேடி

எய்த்து வந்து இழிந்து இன்னமும் துதிக்கின்றார்

எழில்மறை அவற்றாலே

செய்த்தலைக் கமலம் மலர்ந்து ஓங்கிய

தில்லை அம்பலத்தானைப்

பத்தியால் சென்று கண்டிட என்மனம்

பதைபதைப்பு ஒழியாதே. (9-23-5)

திருச்சிற்றம்பலம்

## 9-29. சேந்தனார் - கோயில் (திருப்பல்லாண்டு)

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள் வஞ்சகர் போய்அகலப்
பொன்னின்செய் மண்டபத்து உள்ளே புகுந்து புவனி எல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன் அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.(9-29-1)

திருச்சிற்றம்பலம்

## 12-14. ஆனாய நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

மெய் அன்பர் மனத்து அன்பின் விளைந்த இசைக் குழல் ஓசை
வையம் தன்னையும் நிறைத்து வானம் தன் வயம் ஆக்கிப்
பொய் அன்புக்கு எட்டாத, பொன் பொதுவில் நடம் புரியும்
ஐயன் தன் திருச் செவியின் அருகு அணையப் பெருகியது ஆல். (12-14-37)

திருச்சிற்றம்பலம்

## 50) திருமுறை - 3, 54 - பொது (திருஆலவாய்), திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. (1)

அரிய காட்சியராய்த் தமது அங்கை சேர்
எரியர் ஏறு உகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடு உறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர் அறிவார் அவர் பெற்றியே. (2)

வெந்த சாம்பல் விரை எனப் பூசியே
தந்தையாரொடு தாய் இலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தையார் அவர் எவ்வகையார் கொலோ. (3)

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில் அளவு இல்லை கிளக்க வேண்டா
கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவை கேட்க தக்கார். (4)

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டு உளன் எங்கள் சோதி
மா துக்கம் நீங்கல் உறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே. (5)

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழ் அல்லது பாவம் நீங்கக்

கேடும் பிறப்பும் அறுக்கும் எனக் கேட்டீர் ஆகில்
நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டல் ஆமே. (6)

கடிசேர்ந்த போது மலர் ஆன கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால் கொண்டு அங்கு ஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலை அறவெட்டிட முக்கண் மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டும் அன்றே. (7)

வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே. (8)

பார் ஆழி வட்டம் பகையால் நலிந்து ஆட்ட ஆடிப்
பேர் ஆழி ஆனது இடர் கண்டு அருள் செய்தல் பேணி
நீர் ஆழி விட்டு ஏறி நெஞ்சு இடம் கொண்டவர்க்குப்
போர் ஆழி ஈந்த புகழும் புகழ் உற்றது அன்றே. (9)

மால் ஆயவனும் மறைவல்ல நான்முகனும்
பால் ஆய தேவர் பகரில் அமுது ஊட்டல் பேணிக்
கால் ஆய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு அங்கு அமரர்க்கு அருள் செய்ததாமே. (10)

அற்று அன்றி அம்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்
தெற்று என்று தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்நீர்ப்
பற்று இன்றிப் பாங்கு எதிர்வின் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே. (11)

நல்லார்கள் சேர் புகலி ஞானசம்பந்தன் நல்ல

எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர் உலகு ஆளவும் வல்லர் அன்றே. (12)

திருச்சிற்றம்பலம்

## 51) திருமுறை - 2, 85 - பொது (திருமறைக்காடு), திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடம் உண்ட கண்டன்

மிக நல்ல வீணை தடவி

மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து

என் உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி

சனி பாம்பு இரண்டும் உடனே

ஆசு அறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடு ஆமை இவை மார்பு இலங்க

எருது ஏறி ஏழை உடனே

பொன் பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்

உளமே புகுந்த அதனால்

ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொடு ஆறும்

உடன்ஆய நாள்கள் அவைதாம்

அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. (2)

உரு வளர் பவளமேனி ஒளி நீறு அணிந்து

உமையோடும் வெள்ளை விடைமேல்

முருகு அலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்

திருமகள் கலைஅது ஊர்தி செயமாது பூமி

திசைதெய்வம் ஆன பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (3)

மதி நுதல் மங்கையோடு வடஆல் இருந்து
மறை ஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
கொதி உறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (4)

நஞ்சு அணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சு இருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும்இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (5)

வாள்வரி அதள்அது ஆடைவரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடன்ஆய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்

கோள்அரி உழுவையோடு கொலையானை கேழல்

கொடு நாகமோடு கரடி

ஆள் அரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. (6)

செப்பு இளமுலை நல்மங்கை ஒரு பாகமாக

விடைஏறு செல்வன் அடைவார்

ஒப்பு இள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்

வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்

வினையான வந்து நலியா

அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. (7)

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து

மடவாள் தனோடும் உடனாய்

வாள் மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்து என்

உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்

இடர்ஆன வந்து நலியா

ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல

அடியார் அவர்க்கு மிகவே. (8)

பலபல வேடம் ஆகும் பரன் நாரி பாகன்

பசு ஏறும் எங்கள் பரமன்

சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (9)

கொத்து அலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணம் ஆய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரொடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. (10)

தேன் அமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தான் உறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசு ஆள்வர் ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்